## அழுக்கடைந்த மற்றும் சிதைந்த நோட்டுகள், அனைத்து மதிப்புகளின் நாணயங்களை ஏற்றுக்கொள்ளுதல்/மாற்றிக்கொடுத்தல்

## ஜூலை 18, 2016 தேதியிட்ட ஆர்பிஐ (RBI)-மாஸ்டர் சுற்றறிக்கையின்படி, வங்கிகள் பின்வரும் வசதியை அளிக்க வேண்டும்

A. நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள அனைத்து வங்கிகளின் கிளைகளும் பின்வரும் வாடிக்கையாளர் சேவைகளை மிகவும் செயல்திறனோடும், தீவிரமாகவும் பொதுமக்களுக்கு வழங்க வேண்டும், இதற்காக அவர்கள் ரிசர்வ் வங்கியின் பிராந்திய அலுவலகங்களை அணுக வேண்டிய அவசியமில்லை:

- தேவைக்கேற்ப அனைத்து டினாமினேஷன்களிலும் புதிய/நல்ல தரமான நோட்டுகள் மற்றும் நாணயங்களை வழங்குதல்
- அழுக்கடைந்த / சிதைந்த / குறைபாடுள்ள நோட்டுகளை மாற்றுதல்
- பரிவர்த்தனைகள் அல்லது பரிமாற்றத்திற்காக நாணயங்கள் மற்றும் நோட்டுகளை ஏற்றுக்கொள்வது

B. அனைத்து வேலை நாட்களிலும் எந்தவித பாகுபாடுமின்றி அனைத்துக் கிளைகளும் மேற்கண்ட வசதிகளைப் பொதுமக்களுக்கு வழங்க வேண்டும்.

C. வங்கிக் கிளைகள் எதுவும் தங்கள் கவுண்டர்களில் அளிக்கப்படும் சிறிய மதிப்புள்ள நோட்டுகள் மற்றும் / அல்லது நாணயங்களை ஏற்க மறுக்கக்கூடாது.

மேற்கண்டவைத் தொடர்பான உதவிகளுக்கு, உங்கள் கிளை மேலாளரைத் தொடர்பு கொள்ளவும்.

குறிப்புகள்: கடைசியாக பிப்ரவரி, 2018 இல் புதுப்பிக்கப்பட்டது.